மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இது கூட்டுக் குடிநீர்த் திட்டம். கூட்டுக் கேள்வித் திட்டம் அல்ல. (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறை வேற்றும் போது அவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும்போது ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்களில் அதை ஒப்ப டைக்கிறார்கள். இரண்டு மூன்று ஊராட்சிகளை அதில் இணைத் தால், பராமரிப்பதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே முறை யான தண்ணீர் சப்ளை கொடுக்கமுடியவில்லை, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது அதை ஆய்வு நடத்திக்கொண் டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே முதல்வர் அவர்களோடு கலந்து, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும்போது, அதைப் பராமரிக்கிற பொறுப்புகளை குடிநீர் வடிகால் வாரியமே ஆற்றவேண்டும். அப்படி பராமரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதோடு மேலும் என்னுடைய தொகுதியில் இப்படி குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிற வாய்ப்புகள் உள்ளனவா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருடன் சேர்ந்துபேசி இதுபற்றி முடி வெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயற்கை மழை

*3683 டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இ ராமநாதபுரம் மாவட்டத்தில் செயற்கை மழை பெய்விக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர். எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ராமநாத புரம் மாவட்டம் மிகவும் வறட்சி மாவட்டம். நிரந்தரமாக வறட்சி மாவட்டமாகத்தான் எப்போதும் காட்சியளிக்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் அலையும் சூழ்நிலையில்தான் இருக்கிறார்கள். மற்ற

மாவட்டங்களில் வெள்ளம் வந்தால்தான், மற்ற பகுதிகளில் சேதம் ஏற்பட்டால்தான் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிப்பதற்கு நீர் கிடைக்கிறது. அந்த சூழ்நிலையை அறிந்து வைகை ஆற்றில் அணை கட்டிய பின்பு நிரந்தரமாக குடிப்பதற்கு source of water மற்ற இடங்களில் இல்லாமல் இருக்கிறது. வாட்டர் போர்டு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள் ?

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: வாட்டர் போர்டு தலைவர் கூட source of water இல்லை என்று சொல்வதால் அந்தக் குறையைப் போக்க கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தையாவது, செயற்கை மழை பொழிய வைக்கும் திட்டத்தையாவது செயல்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை மழை பெய்விக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதை முதலிலேயே அறிவித்திருக்கிறேன். மேலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் உப்புநீரை நல்ல நீராக மாற்றும் சில அமைப்புகளும் உருவாக்கப்பட்டு அங்கே செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. 1989-90ல் மட்டும் 340 குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகளுக்கும் 60 ஓரளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளுக்கும் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் வாரியத்திலே நடைபெற்ற கூட்டத்திலே கலந்துகொண்டு இதைப்பற்றி விவாதித்து இருக்கிறார்கள். வைகை ஆற்றினுடைய நீர் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ராமநாதபுரம்-மாவட்ட தலைநகராக இருக்கின்ற காரணத்தால், பரமக்குடி போன்ற நகராட்சிகளுக்கும் சிறப்பு குடிநீர் வழங்குவது எப்படி என்பதை இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீர் வழங்குவதற்கு வைகை ஆற்றில் 3 மாதத்திற்கு ஒருமுறை தண்ணீர் விட அரசு ஸ்பெஷல் ஜி.ஓ. போட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுப்பணித்துறை அமைச்சரைக் கேட்கவேண்டிய கேள்வி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.